உ

கடவுள் துணை.

திருக்குறள்செய்தருளிய

தெய்வப் புலமைவாய்ந்த

# திருவள்ளுவ நாயனார் சரித்திரம்

[புதிய பதிப்பு.]

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை அணா 1½

உ

கடவுள்துணை.

# திருவள்ளுவநாயனர் சரித்திரத்தின்

# பொருளடக்கம்.


| நெம்பர். | | பக்கம். |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் மதம் | |
| 2. | திருவள்ளுவர் காலம் | |
| 3. | திருக்கைலாயத்தின் சிறப்பு | 1 |
| 4. | உமாதேவியார் பிரஸ்னை | ,, |
| 5. | சிவபெருமான் உத்தரம் | ,, |
| 6. | திருவள்ளுவரின் தாய்தந்தையர் | 2 |
| 7. | பகவன் தவமுனியின் புத்திரியை விவாகஞ் செய்து கொள்ளல் | 3 |
| 8. | ஆதிபகவர்களுக்குப் புத்திரோத்பத்தி | 4 |
| 9. | திருவள்ளுவர் பிறப்பு | 7 |
| 10. | திருவள்ளுவர் மலைக்குச்சென்றது | 9 |
| 11. | வேதாளத்தை வென்றது | ,, |
| 12. | வாசுகியை மணஞ்செய்தது | 10 |
| 13. | ஏலேலசிங்கருக்கு ஞானோபதேசம் செய்தது | 11 |
| 14. | ஏலேலசிங்கருக்கும், அச்சுதராஜனுக்கும் தெய்வீகமாகக் குழந்தை கிடைத்தது | ,, |
| 15. | கரைதட்டிய கப்பலைக் கரைக்குச்சேர்ப்பித்தது | 12 |
| 16. | பஞ்சத்தை நிவிர்த்திசெய்தது | ,, |
| 17. | கடலிற்போட்டுவிடப்பட்ட பொன் மீண்டும் கிடைத்தது | ,, |
| 18. | திருக்குறள் பாடியருளியது | 13 |
| 19. | சங்கத்தாரின்மீது வெற்றிபெற்றது | ,, |
| 20. | சங்கப்பலகை இடந்தந்தது | 15 |
| 21. | அகஸ்தியமுனிவரைத் தரிசித்துத் திருமயிலைக்குத் திரும்பியது | 16 |
| 22. | இல்லறம்பெரிதோ? துறவறம்பெரிதோ? | 17 |
| 23. | வாசுகி முத்தியடைந்தது | ,, |
| 24. | திருவள்ளுவர் பரிபூரணமுற்றது | ,, |
| 25. | திருவள்ளுவர் முத்தியடைந்த திருநக்ஷத்திரம் | 18 |
| 26. | திருவள்ளுவநாயனர் தோத்திரம்: சற்குருவிசுவாசம் | 19 |
| 27. | திருவள்ளுவநாயனர் வருகைப்பஞ்சகம் | 20 |
| 28. | தேவர் தியானுஷ்டகம் | 21 |
| 29. | திருவள்ளுவர் நாமாவளி | 22 |
| 30. | திருவள்ளுவநாயனர் சந்நிதிவிளக்கம் | 23 |
| 31. | திருவள்ளுவரின் பெயர்கள் | 24 |
| 32. | திருக்குறளின் பெயர்கள் | ,, |
| 33. | திருக்குறளுரையாசிரியப்பா | ,, |



திருவள்ளுவ நாயனர்.

# திருவள்ளுவர் மதம்

திருவள்ளுவர் சரித்திரமென நாம் அறிவனவெல்லாம் ஐதிகத்தால் அறியப்படுவன; அவற்றைக்கொண்டு அவர் மதத்தை நிச்சயித்தல் எளிதேயாம். தமிழ்நாட்டிலுள்ள மக்கட்குத் தெரிந்தவரையில் திருவள்ளுவர் சைவரேயாவர். ஆயினும், ஜயினர் அவரை ஜயினுசாரியரு ளொருவராகக் கொள்ளுதல் கவனிக்கத்தக்கது. வைணவர் அவ்வாறு அவரைத் தம்மவராகக் கொள்ளுதல் இதுவரை கேட்கப்படவில்லை. திருவள்ளுவர் மயிலாப்பூரிலிருந்து தம்மொளி விளக்கியவரென்று சரித்திரஞ் சொல்லுவதை யனுசரித்துப் பிற்காலத்தில் அவர்க்கு ஒரு கோயிலமைக்கப்பட்டுப் பூஜை முதலியன நடந்துவருகின்றன. திருவள்ளுவர் விக்ரஹத்திற்குத் திருநீறும் உருத்திராக்ஷமும் தரிக்கப்படுகின்றன.

இவ்வாறு ஐதிகம் நமக்கு உணர்த்த, அவர் இயற்றிய திருக்குறளால் நாம் அறியலாவ தியாதென்று நோக்குவோம். ஆராய்ச்சி விஷயங்களில் ஐதிகத்தினும் பன்மடங்கு சிறந்ததன்றோ நூல்? ஐதிகம் ஒரு விஷயத்தை எவ்வளவு உறுதியாய் உரைப்பினும் அது நூலால் மறுக்கப்படுமாயின் அழிதல் திண்ணம்.

ஜயினக் கடவுட்குரிய 'மலர்மிசை யேகினுன்', 'அறவாழி யந்தணன்' முதலிய பெயர்கள் காணப்படுதலாலும், கடவுள் வாழ்த்து முதலிய நான்கதிகாரங்களும் அருக சரண முதலிய நான்கு சரணங்களையுங் குறிக்க வெழுந்தனபோல் நிற்றலாலும், ஜயினரியற்றிய நூல்களுள் திருக்குறளினின்றும் மேற்கோள்கள் எடுத்து வழங்கப்பட்டமையானும் திருக்குறளாசிரியர் ஜயினரென்றுரைப்பர் சிலர்.

அடியளந்தானென்றும் செங்கண்மாலென்றும் சிலவிடங்களிற் குறித்தலின் அவர் வைணவரென்பது சிலர் கொள்கை. உரையாசிரியர் பரிமேலழகரும் முக்கியமான சிலநுட்பங்களை விளக்க வந்த விடங்களில் வைணவக் கிரந்தங்களினின்று மேற்கோள் காட்டித் திருவள்ளுவர் வைணவரென்று தாம் கருதுவார்போல எழுதிப்போயினர்.

சைவப்பெரியோர் இயற்றிய பிரபந்தங்களுள்ளும் சாஸ்திரங்களுள்ளும் திருக்குறள் மேற்கோள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இவற்றை நன்குக ஆலோசிக்கின், கல்லாடர் திருவள்ளுவமாலையுட் கூறிய

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றெனவெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி

என்னும் கருத்தே வலிபெறுவதாம். திருவள்ளுவர் தம்மதம் இன்ன தென்று மறந்துஞ் சுட்டியவ ரல்லர். எல்லாச் சமயத்தாரும் கொண்டாடத்தக்க தருமநூலைச் செய்வதே அவர் கருத்து. அவர் சைவரோ ஜயினரோ எம்மாற் சொல்ல வியலாது. குறளால் அவர் இன்னமதத்தினரென்று துணிந்துரைக்கப்புகுதல் தருக்க வழுவுட்படும். அருக சரணமுதலியவற்றைக் குறிக்கவேண்டுமாயின் அவ்வாறே நேரே குறித்து நூல்செய்திருக்கலாமே! வைணவராயின் கடவுள் வாழ்த்துள் திருமால் பெயர்களை வழங்கியிருக்கலாமே!

இதனாற் றேர்வது திருவள்ளுவர் நீதிநூலொன்றைச் செய்யவந்தவரே யன்றி மதநூலைச் செய்யவந்தவ ரல்லர். நீதிநூலும் எல்லாச் சாதியினர்க்கும் எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவா யிருத்தலை அவர் வேண்டினவராகலின், தம்மதமின்னதென்று குறியாது பொதுவாகக் கடவுள் வாழ்த்து முதலியன கூறினர்.

இனி, இக்காலத்துக் காணலாகும் ஆன்றோர் சிலரைப்போலத் திருவள்ளுவரும் மதங்களெல்லாவற்றுள்ளும் சிறந்த பொருள்களைத் தெரிந்தெடுத்துத் தம்மறிவிற்குச் சம்மதமாகிய மதமொன்றாக்கி அவ்வழி யொழுகி வந்தவரெனினும் பொருந்தும்.

---

## திருவள்ளுவர் காலம்

திருக்குறளால் மதுரையிற் கடைச்சங்கம் அழிந்ததெனும் ஐதிகம் ஆராய்ச்சியில் நிலைபெறுமோ என்பது சந்தேகம். கடைச்சங்க காலமே இதுவென நிச்சயமாயுரைத்தற் கில்லை. ஆயினும் திருக்குறளின் காலத்தை ஒருவாறு நிச்சயிக்கலாம். பஞ்சகாவியங்களுள் மூன்று நமக்குக் கிடைத்திருப்பன. அவற்றுட் பழைய காவியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும். சிலப்பதிகார மியற்றப்பட்ட காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியென வரையறுக்கப்பட்டுளது. அதனை யடுத்தியற்றப்பட்ட மணிமேகலையுள் திருக்குறள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டது. ஆதலால் இக்காவியங்களியற்றப்பட்ட காலத்துக்கு முந்தியது திருக்குறளியற்றப்பட்ட காலமென்பது நிச்சயமாய் ஏற்படும். மேற்கோள் வந்தவாறு:

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுபவள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை கேளாய்.

இதனால் திருக்குறள் முதல்நூற்றாண்டிற் றோன்றிய நூலாகுமென்பது.

**S. அனவரதவிநாயகம் பிள்ளை.**

---

கடவுள் துணை.

# தெய்வப்புலமை வாய்ந்த
# திருவள்ளுவநாயனார் சரித்திரம்.

## திருக்கைலாயத்தின் சிறப்பு.

புண்ணிய பூமியாகிய இப்பாரதகண்டத்திலே இமயமலையி னுச்சியிலே, மஹா சிறப்புப் பொருந்தி விளங்கும் திருக்கைலாயத்திலே, உயர் வொப்பில்லாத செம்பொற் றிருக்கோயிலிலே, நவரத்தினங்களாற் செய்யப்பட்டு, சூரியனது பிரகாசத்துக்கும் மேம்பட்டு விளங்கும் திவ்விய சிங்காதனத்தின்மீது, நித்தியாநந்தராய்ச் சிவபெருமான் பிரமாதி முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலானவர்கள் இருபுடையும் சூழ்ந்து வணங்கித் தோத்திரித்து நிற்கவும், பூதர்கள் பல வாத்தியங்களை முழக்கியும் வெண்சாமரை வீசியும் ஆலவட்டம் அசைத்தும் நிற்கவும், சிவநாமங்களின் பேரொலி எங்கும் தழைத்தோங்கவும், தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் இடப்பாகத்தில் வீற்றிருக்கவும், அளவிறந்த பெருங் கருணையோடு திருவோலக்கமாக எழுந்தருளி யிருந்தனர்.

## உமாதேவியார் பிரசினை.

அப்போது உமாதேவியார் எழுந்து பரமபதியாகிய சிவபெருமானை வணங்கினின்று, "சுவாமி! திரிலோகங்களிலேயும் இல்லறம் வழுவாது நடாத்தி முத்தியடைந்தவர்க ளுண்டோ? அதனைத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும்" என்று மிகுந்த கருணையோடு வினவ, சிவபெருமான் அருளிச்செய்கின்றார்:—

## சிவபெருமான் உத்தரம்.

"உமையே! தெய்வலோகத்தில் வசிஷ்டர், அகஸ்தியர், அயன், புயங்கன், சம்பு என்கிற ஐந்துபேருண்டு. பூலோகத்தில் திருவள்ளுவர் என்றொருவருண்டு. இவர்கள் தென்புலத்தார் கடன், தேவர் கடன், விருந்தோம்பல், சுற்றந்தழுவல், கபிலைபூசைசெய்தல் முதலியன முடித்து, இல்லறத்தில் கற்பின்வழுவாத நற்குண நற்செய்கையுள்ள மனைவியரோ டிருந்து, இல்லற தருமம் நடாத்தி மோக்ஷமடைந்தனர்" என்று திருவாய்மலர்ந்தருள, பார்வதியார் "சுவாமி! பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? அவர் சரித்திரம் கேட்க விரும்புகின்றேன்" என்று கேட்க, சிவபெருமான் சொல்லுகிறார்:—

"பூர்வத்திலே ஒரு பிரளயம் வந்தது. அது வருமென்று பிரமன் முன்னரே யறிந்து, அதிலே இறவாது பிழைக்கும்படி வேற்றுருவடைந்து, ஒரு சுரைக்கூட்டைத் தனக்கிடமாகக் கொண்டு அதிற் புகுந்து, அவ்வெள்ளத்தின்மேல் மிதந்து வந்தனன். அது கண்டு, நாம் யாதும் அறியாததுபோல் சுரைக்கூட்டி னருகிற் சென்று, "இதற்குள்ளிருப்பவன் யாவன்" என்றுகேட்கத் தான் "வருங்கால மறிந்து செய்தற்கேற்ப வள்ளுவன்" என்றான். "இப்பிரளயத்தில் நீ எப்படிப் பிழைத்திருக்கின்றாய்" எனக் கேட்டோம். அப்போது பிரமன் நம்மை யறிந்துகொண்டு மிகுந்த பேரானந்தத்தை யடைந்து, "பரமசிவமே! உமது திருவருளினாலன்றோ பிழைத்திருக்கின்றேன்; ஆயினும், தேவரீர் அடியேன்மீது கிருபை கூர்ந்து இந்தப் பிரளயத்தை நீக்கி யருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, நாம் "அந்த அதிகாரத்தை உமக்கே கொடுத்தோம்" என்று சொல்லி, அவராலே முன்போல் உலகத்தைப் படைப்பித்தோம். அத்தன்மையுடைய அவர் பூமியிலே பிறந்த காரணமுஞ் சொல்லுகின்றோம்.

ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட்டிலே மதுரைமாநகரத்திலிருந்த சங்கப்புலவர்கள் நம்மை ஓர்கால் அவமதிப்புச் செய்ததின் பொருட்டு அவர்கள் கர்வபங்கமாகும்படிப் பிரம ஸ்வரூபாகிய திருவள்ளுவரையும், மஹாவிஷ்ணுவையும், சரஸ்வதியையும் பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினோம். அவருள் மஹாவிஷ்ணு இடைக்காடராய்ப் பிறந்தார். சரஸ்வதியும் திருவள்ளுவரும் வந்த மரபுங் கேட்பாயாக.

ஆதியிலே பிரம புத்திரர்களாகிய காசிபர் முதலிய நவப்பிரமாக்களில் காசிபர் ஊர்வசியைச் சேர்ந்து வசிஷ்டரைப் பெற்றார். அவர் அருந்ததியைச் சேர்ந்து சத்தியரைப் பெற்றார். அவர் புங்கனூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பராசரைப் பெற்றார். அவர் மச்சகந்தியைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங்களுக்குரியவரானார்கள்.

## திருவள்ளுவரின் தாய் தந்தையர்.

பின்பு பிரமாவானவர் இன்னுஞ் சில புத்திரரால் வடமொழியையுந் தென்மொழியையும் விளங்கச் செய்யவேண்டுமென்று எண்ணி, வேதவிதிப்படி ஒரு யாகஞ் செய்ய, அதன்கண் வைத்திருந்த கும்பத்தினின்றும் கலைமகளே அவதரித்தனள். அவளைப் பிரமா விவாகஞ் செய்துகொண்டார். பின்பு அகஸ்தியர் குறிய வடிவோடு அக்கும்பத் துதித்தனர். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ்சாகர னென்பவரைப் பெற்றார். அவர் திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப் பெற்று, அவருக்குச் சகல சாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்நாளில் பிரம வம்சத்தில் தவமுனி என்பவர் அருள்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்று வைத்து விராலிமலையில் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையர் கண்டெடுத்

துச் சிலகாலம் வளர்த்து வருகையில், மேல் நடக்கப்போகிற காரணத்தினல், இந்தப் பெண் தவிர மற்றவர்கள் யாவரும் இறக்கும்படி அந்தச் சேரியில் எக்காரணமுமின்றி மண்மாரி பெய்தது. பின்பு அந்தப் பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்தில் நீதியையன் வீட்டில் வளர்ந்து வந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகல சாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மரியாதை பண்ணும்படிப் பிராமண கிர்த்தியத்தில் வழுவாதவரா யிருக்கையில், யாத்திரைபண்ணும்படி இச்சைகொண்டு காசிக்குப் போம்போது, மேலூர் அகரத்துக்கடுத்த ஒரு சத்திரத்தி லிறங்கி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்துகொண் டிருந்தார். அவ்விடத்தில் அந்தப்பெண் வர, அவளைக் கண்டு "நீ யார்? புலைச்சியோ! வலைச்சியோ! இங்கே வந்தாய்" என்று அதட்டி, மிகுந்த கோபங்கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உதிரஞ்சோர அடித்து ஓட்டினர். அவள் அழுதுகொண்டு தன்னிடத்துக்குப் போய்விட்டாள்.

## பகவன் தவமுனியின் புத்திரியை விவாகஞ் செய்துகொள்ளுதல்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானம்செய்து போசனம்பண்ணி அதிசீக்கிரத்தில் வழிக்கொண்டு சிலநாளிற் காசிக்குப்போய்க் கங்கா ஸ்நானஞ்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடிகட்டிக்கொண்டு வரும்போது, முன் தங்கியிருந்த சத்திரத்திலேயே வந்திறங்கினர். மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது மஹா லட்சுமியைப்போலும் பேரழகும், யௌவன பருவமும் உடையவளாய் அங்கே வந்தாள். பகவனென்பவர் இவளுடைய சௌந்தரிய முதலிய குணங்களைப் பார்த்து மோகங்கொண்டார். அச்சத்திரத்துக்கு அதிபராகிய நீதியையர் என்பவர் அக்குறிப்பினைக் கண்டு, "என் பெண்ணை நீர் விவாகம் பண்ணிக்கொண்டு இங்கேயேயிருக்கலாம்" என்றுசொல்ல, அதற்கு அவர் "நான் கொண்டுவந்த காவடியை இராமேச்சுரத்திற் செலுத்தி வந்து அப்படியே செய்கிறேன்" என்று உறுதிமொழி கூறி, அவரிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு போய், இராமலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணித் திரும்பி வந்தார். அப்போது நீதியையர் பந்து மித்திரர்களோடிருந்து குறித்த கன்னிகையைப் பகவனுருக்குப் பாணிக்கிரஹணம் செய்து கொடுக்க, விசேஷமாய் நாலுநாளைய சடங்குகள் சந்துஷ்டியாய் நடந்தேறின. ஐந்தாநாள் மங்கள ஸ்நானஞ் செய்விக்கும்போது பகவனென்பவர் அந்தப் பெண்ணினுடைய தலையில் எண்ணெயைப் பெய்யும்படி மயிரை வகிர்ந்தார். அப்போது தாம் முன்பு சட்டுவத்தாலடித்த வடுவைக் கண்டு அனுமானித்து, "இந்தப் பெண் யார்?" என்று வினவி, அவள் வரலாற்றை முற்றும் விசாரித்து விசனங்கொண்டு, "நீ ஆதியளல்லவா!" என்று சொல்லி விட்டு ஓடினர். அதுவே அவளுக்கு "ஆதி" என்னும் காரணப்பெயராயிற்று.

அப்படி ஓடிய பகவனென்பவர் பொழுது போகையில் எதிரே கண்ட பாணர் சேரியில் இருந்த ஒரு மண்டபத்திலே தங்கினர். அதுகண்டு ஆதியென்பவளும் அவர் பின்னே தொடர்ந்து, அவரைக் கண்டு வணங்கினின்று, "என் அன்பிற்கினிய பர்த்தாவே! தெய்வச் செயலால் உமக்கும் எனக்கும் இந்தக் காரியம் நடந்திருக்கச் சகல நீதியும் அறிந்த நீர் என்னை விட்டு நீங்குதல் உமக்குத் தகுமோ? அல்லது தருமமோ? அரைக்கணம் உம்மை நீங்கி நான் உயிர் வாழ்ந்திருப்பனோ?" என்று மிகவும் இரக்கத்துடன் சொல்லப் பிராபத்துவ கர்மவசத்தால் இவர் புத்தியினும் அது சரியென்று பட்டுப் "பெண்ணே! என்னிடத்தில் உனக்கு உண்மையான அன்பு இருக்குமானால் யான் சொன்னபடி கேட்கவேண்டும். அஃதென்னெனில், உனக்குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கின்றனவோ அங்கங்கே அவைகளை அப்பொழுதே விட்டு வருவையானால் நான் உன்னைக் கூடச் சம்மதிப்பேன்" என்று சொல்ல, அவள் அதற்கு உடன்பட்டபடியால், அன்றிரவில் அம்மண்டபத்தில் இருவருங் கூடினார்கள்.

## ஆதிபகவர்களுக்குப் புத்திரோற்பத்தி.

### 1. ஔவையார்.

அப்போது நம்முடைய கட்டளையின்படி **சரஸ்வதி** யாவராலும் புகழப்பட்ட ஔவையாகப் பிறந்தனள். ஆதி என்பவள் தன்னை மணஞ் செய்துகொள்ளும்பொருட்டு முன்பு பகவனுக்கு உடன்பட்டு வாக்குத்தத்தம் செய்திருந்தபடி, பின்பு பெற்ற ஷை குழந்தையை உடனே விட்டுப் பிரிகையில், இதனை யாவர் காப்பாற்றுவார் என்று இரங்கிக் காலெழாது வருந்தி நிற்க, அப்போது அந்தக் குழந்தை கடவுளருளால் உண்மை யுணர்ந்து சொல்லிய

#### வெண்பா.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையை அச்சேரியிலுள்ள பாணர்களெடுத்து வளர்க்க வளர்ந்து, சரஸ்வதி ஆகையால் இயல்பாகவே கலைமுழுவது மறிந்து, "சீதக்களப" என்னுங் கணபதி அகவல்பாடி அவரை உபாசித்து, உலோகோபகாரமாக "ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, குறள், அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து" முதலியவுஞ் செய்து, ஒவ்வோர் காரியத்தின்பொருட்டுத் தனிக் கவிகள் அநேகம் பாடி, அநேக அற்புதங்களெல்லாஞ் செய்து முடித்து வருநாளில், ஒருநாள் கணபதி பூஜை விரைவாகச் செய்தனள். அப்போது பிள்ளையார் "வழக்கப்படியன்றி விரைந்து செய்வது என்" என்று கேட்க, "சுவாமி! சுந்தர

மூர்த்தியாரும், சேரமான் பெருமானுரும் கைலாயத்துக்குப்போகின்ருர்கள். என்னையும் அழைத்தார்கள்" என்ன, "அவர்களுக்கு முன்னே உன்னை அங்கே விடுவேன்; நீ பூசையை வழக்கப்படி முடி" என்ருர். தன் பூசையை கிரமப்படி முடித்தாள். உடனே கணபதி துதிக்கையால் எடுத்துவிடக் கைலாசமலையை அடைந்தாள். பின்பு போன அவ்விருவரும் ஔவையைக் கண்டு அதிசயப்பட்டார்கள்.

## 2. உப்பை.

இது நிற்க, முன்புபோன அவ்விருவரும் தொண்டை நாட்டில் ஊற்றுக்காடென்னும் ஊரிலுள்ள ஓர் மடத்திற் சென்று கூடினுர்கள். அப்பொழுது உப்பை என்பவள் பிறந்தாள். இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதை விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

அத்தி முதலெறும்பீ ருனவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனுனே காக்கக் கடனிலையோ
வற்பனே வன்னு யரன்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். அவ்வுப்பை முற்பிறப்பில் யாரெனில், பிருகுவின் பத்தினியாகிய நாகவல்லி என்பவள். திரிமூர்த்திகளும் அவள் அழகின் மிக்கவளென்று கேள்விப்பட்டுப் பார்க்க மாறுவேஷங்கொண்டு போய் நிர்வாண பிட்சை கேட்டார்கள். அவள் மஹா பதிவிரதையாகையால் இவர்களைப் பாலராக்கி, அப்படியே பால்கொடுத்துத் தன்னைப் பரிசோதித்ததற்குக் கோபங்கொண்டு, அவர்களை மூன்று சனனம் எடுக்கும்படிச் சொன்னுள். அதுகண்ட திரிமூர்த்திகளும் தங்களை அவள் மதிக்காமல் பாலராக்கி மூன்று சனனம் எடுக்கும்படிச் சொன்னதற்காகச் சினங்கொண்டு, "நீ அழகின்றி மாறுவடிவாகக் கடவை" என்று சபித்துப் போயினர். பின்பு பிருகுவானவர் இவள் வேற்று வடிவைக் கண்டு, "நீ பூமியில் பிறக்கக்கடவை" என்றனர். அவள் கணவ னுத்தரவின்படி உப்பை என்பவளாக அவதரித்து வண்ணுர் வளர்க்க வளர்ந்து, மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னைப் போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமாக இருக்கின்றனள்.

## 3. அதிகமான்.

இது நிற்க, முன்புபோன அவ்விருவருஞ் சோழதேசத்திற் கருவூரிலடைந்து ஒரு சோலையிற்கூட அதிகமான் என்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதை விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய—னுருப்பெற்ரு

ஹூட்டி வளர்க்கானோ வோகெடுவோ யன்னாய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். பின்பு அந்தக் குழந்தையைச் சேரமான் எடுத்து வளர்க்க வளர்ந்து, வில்வேதம் மனுவிக்கியான முதலிய யாவுங் கற்று, முடி சூட்டப்பெற்று, சொக்கநாதர் திருமுகமெழுதிக்கொடுக்க, பாணபத்திரருக்கு வேண்டிய திரவியங்கள் கொடுத்துப் பொன்வண்ணத் தந்தாதி என்றோர் பிரபந்தம் பாடிச் சிதம்பரத்தில் அரங்கேற்றி அரசுசெலுத்திச் சுந்தரமூர்த்தியார் நட்புப்பெற்றிருந்து, அவர் கைலைக்குப் போகும்போது உடனே போய், அங்கே தாம் பாடியருளிய ஆதியுலாவை அரங்கேற்றி நமது அனுக்கிரகம் பெற்று வீற்றிருந்தார்.

## 4. உருவை.

முன்புபோன அவ்விருவரும் காவிரிப்பூம் பட்டினத்தடைந்து ஒரு மண்டபத்திற் கூடினார்கள். உருவை என்பவள் பிறந்தாள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

சண்டப்பைக் குள்ளுயிர்தன் றுயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய—மண்டி
அலைகின்ற வன்னா யானுடைய வுண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையைக் கள்விற்போ ரெடுத்து வளர்க்க, வளர்ந்து தவஞ்செய்து, பத்திரகாளியாய்த் தாருகனைக் கொன்று, திருவாலங்காட்டில் சபாநாயகராய் எழுந்தருளிய நம்முடனே நிருத்தஞ்செய்து அதிலே தோற்று, அகோர வீரபத்திரரை விவாகம் பண்ணிக்கொண்டு, அவ்விடத்தில் இருந்தாள்.

## 5. கபிலர்.

இதுநிற்க, முன்பு அவ்விடம் விட்டுப்போன இருவரும் திருவாரூரை யடைந்து ஒரு மடத்திற்கூடக் கபிலர் என்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு
முண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணு
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். அக்குழந்தையைத் தமக்குப் பிள்ளையில்லாத பாப்பையனென்னும் ஒரு பிராமணன் எடுத்து வளர்த்து, ஏழு வயதில் உபநயனம் செய்யத் தொடங்குகையில், பிராமணர்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று சொல்ல, அதைக் கண்ட கபிலர் அவர்களைப் பார்த்து, "நான்முகத்தோன்" என்று ஓர் அகவல் சொல்லிக் கருமத்தினுல் ஜாதியன்றிச் சென்மத்தால் இல்லையென்று சாதிக்க, அதற்குப் பிரதியுத்தரஞ் சொல்லமாட்டாமல், இதுவேவிதி என்று யாவரும் ஒத்துக்கொண்டு, உபநயனச் சடங்கு செய்து முடித்தார்கள். அக்கபிலர் இன்னும் பாதாளலோகத்தில் தவம் பண்ணிக்கொண் டிருக்கின்றனர்.

## 6. வள்ளியம்மை.

இதுநிற்க, முன்புபோன அவ்விருவரும் வேளின் மலைச்சாரலில் வந்து கூட, அப்பொழுது வள்ளியம்மை பிறந்தனள். இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்று
னின்னும் வளர்க்கானே வென்றுயே—மின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையை மலைக்குறவர் வளர்த்தார்கள். அவள்முற்பிறப்பில் யாரெனில், மஹாவிஷ்ணுவினுல் மோகிக்கப்பட்ட விபுதை என்பவளிடத்தில் பிறந்த குமரி. அவள் குமாரக்கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தபோது, அவர் வரப்படி தொண்டைமண்டலத்தில் வள்ளிமலையில் இருந்த கடவுளுக்கு நாயகியானுள்.

## 7. திருவள்ளுவர்.

இதுநிற்க, முன்புபோன அவ்விருவரும் திருமயிலாப்பூரில் இலுப்பைத் தோப்பில் கூடினுர்கள். அப்பொழுது திருவள்ளுவர் பிறந்தனர். இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது, அது சொல்லிய

வெண்பா.

எவ்வுயிருங் காக்கவொரு ஈசனுண்டோ வில்லையோ
வவ்வுயிரில் யானெருவ னல்லனே—வவ்வி
யருகுவது கொண்டிங் கலைகுவதே னன்னே
வருகுவது தானே வரும்.

அதுகண்டு தாய் மனந்துணிந்து நீங்க, அவ்விருவருந் தீர்த்தயாத்திரைக்குச் சென்றனர். பின்பு சிவாலயத்தின் அருகேயுள்ள இலுப்பைமரத்தின் கீழிருந்த குழந்தை அங்குள்ள ஆலயத்தில் நம்மை ஆத்

மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு, அவ்விலுப்பை மலரிற் றுளிக்குந் தேனை உண்டு, பூர்வம் பிரமா ஆதலால், சிகை எக்யோபவீதம் சதுர்வேத புஸ்தகமுங் கொண்டு வளர்ந்து வருகையில், கங்காகுல சிரேஷ்டனுகிய ஒரு வேளாளன் மனைவி, புத்திரபாக்கியத்தைக் குறித்து நெடுநாள் அச்சிவாலயத்தி னேர்புறம் தவஞ்செய் திருந்தனள். அப்பொழுது நாம் அவளுடைய தவத்திற்கிரங்கி, "இந்தக்குழந்தையை நீ எடுத்துக்கொள்" என்று அருள்செய்து, "திருவள்ளுவர் என்று நாமகரணமுஞ் செய்" என்று ஆஞ்ஞாபித்தோம். அவளும் அந்தக் குழந்தையை எடுத்து மகிழ்ச்சியடைந்து கொண்டுபோய்த் தன் புருஷன் கையிற் கொடுத்தாள். அவனும் அக்குழந்தையை இருகையேந்தி வாங்கித் தன்மடியிலிருத்தி, உச்சிமோந்து, கொஞ்சி, விளையாடி, பேரானந்தம் பெற்று, அதுவந்த வரலாறு கேட்டு, இப்படி இருவரும் அந்தப்பிள்ளையை நாளொருமேனி பொழுதொரு வண்ணமாய் அருமையாக வளர்த்துவருங் காலத்தில், அதுகண்ட அவர்கள் சுற்றத்தார் "ஏதோ ஒரு பிள்ளையை வளர்க்கிறுர்கள்" என்று இவர்களை இகழ்ச்சி செய்ய, அதற்கு அவர்கள் அஞ்சிப் புறத்திலுள்ள ஓர் தொழுவத்திலே தொட்டிவிட்டு, அதில் அக்குழந்தையைக் கிடத்திப் பண்ணைக்காரரைக் காவல் வைத்து வளர்த்து வந்தார்கள். *

---

* ஔவையார்முதல் திருவள்ளுவர் ஈருக உள்ள எழுபேருடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றிக் கபிலர் தாம் உபநயனத்தின் போது பாடிய அகவல்:—

"அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினி லன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே
யென்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனி
லாண்பான் மூவர் பெண்பா னல்வர்
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மி
னூற்றுக் காடெனு மூர்தனிற் றங்கியே
வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்
காவிரிப்பூம் பட்டினத்திற் கல்விளைஞர் சேரியிற்
சான்று ரகந்தனில் உறுவை வளர்ந்தன
ணரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியிற்
பாண ரகத்தில் ஔவை வளர்ந்தனள்
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தன
டொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தன
ரரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
யதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னி
லந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்."

## திருவள்ளுவர் மலைக்குச் சென்றது.

பின்பு திருவள்ளுவரும் ஐந்து வயதானகாலத்துத் தன்பொருட்டுத் தாயும் தகப்பனும் சுற்றத்தார்களால் நிந்தை செய்யப்படுகிறார்கள் என்று அவர்களைப் பார்த்து, "என்னால் உங்களுக்கு வருத்தம் வேண்டுவதில்லை; இனி நான் வேறிடத்தி லிருக்கின்றேன்; நீங்கள் வருந்தாதிருங்கள்" என்று சொல்ல, அவர்கள் "அப்பா! மகனே! உன்னைப் பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெருமான் என்று எண்ணி யிருந்தோமே! நீ இப்படிச் சொல்லலாமா! உன்னை அரைக்கணம் பிரிந்து உயிர் தரித் திருப்போமா?" என்று கூற, **நாயனார்** "நீங்கள் என்னை நினைக்கும்போது வந்து உங்களுக்கு வேண்டியதைச் செய்வேன்; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை" என்று சொல்லிப் புறப்பட்டு, அவ்வூருக்கு அருகே ஒரு பனைமரத்தின் நிழலிலே இருந்தார். அப்பனைமரத்தடி நீழல் அவரைவிட்டு நீங்காதிருக்க, அதைக் கண்டவர்கள் எல்லாம் "இப்பிள்ளை தேவனோ? முனிவனோ? கடவுளோ? இவ்வுருக்கொண்டு வந்தது" என்று துதிக்க, அவர்களைப் பார்த்து நாயனார் "இங்கே தவமேது? மகிமையேது? யாதொன்றும் என்னிடத்தில் இல்லை போம்!" என்று தாம் அவ்விடத்தைவிட்டு நீங்கித் **திருமூலர், போகர்** முதலாகிய சித்தர்களும், மாதவர்களும் வாசஞ் செய்கின்ற மலைக்கு எழுந்தருள, அங்கிருந்த திருமூலர் நாயனாரைக் கண்டு, "வள்ளுவரே! பூர்வத்தில் **நந்தி** எனக்கு அனுக்கிரகம் பண்ணினபோது, அங்கே இருந்தீரே; உலகத்தாருக்குச் சித்தி முத்தி அருளும்படிக்கும், அறம் பொருள் இன்ப மென்னு முப்பாலையுந் தமிழில் அருளிச்செய்யும்படிக்கும், இங்குவந்து அவதரித்தீரோ!" என்று துதிக்க, நாயனாரும் மகிழ்ந்து அங்கே தவஞ் செய்வோரில் ஒருவராகத் தாமும் இருந்தனர்.

## வேதாளத்தை வென்றது.

அக்காலத்தில் தொண்டைமண்டலத்தில் ஒரு வேதாளமானது பயிர்களை அழித்தும், உயிர்களை வதைத்தும், அநேக துன்பஞ்செய்து வந்தது. அப்பொழுது சாவேரிப்பாக்கம் என்னும் ஓர் ஊரிலிருக்கும் ஆயிரம் ஏர்வைத்துப் பயிர்த்தொழில் நடாத்தும் **மார்க்கசகாயன்** என்னும் ஒரு வேளாளன், "இந்த வேதாளத்தை அடக்கினவருக்கு அளவற்ற திரவியமும் ஓர் ஊரும் வேண்டியவைகளையுந் தருகிறேன்" என்று பிரசித்தப்படுத்தி யிருந்தான். அதனை அடக்க ஒருவராலும் ஆகாமலிருந்தமையால், பின்பு அவ்வேளாளன் பெரியோர்கள் வாசஞ் செய்யாநின்ற மலையில் வந்து, திருமூலர் முதலானவர்களுடன் சொல்ல, அவர்கள் "அதோ இருக்கும் திருவள்ளுவரோடு சொல்" என்றார்கள். அவ்வாறே அவ்வேளாளன் நாயனாரை வணங்கிச் சொல்ல, அப்போது சிவகாருணியராகிய நாயனார், அவ்வேளாளன் வேண்டிக்கொள்வதை நிறைவேற்றும்பொருட்டு, அவ்வேதாளத்தை விபூதி பஞ்சாட்சரத்தால் வென்று, யாவரையும் ரக்ஷித்தார்.

### வாசுகியை மணஞ்செய்தது.

அதுகண்டு அவ்வேளாளன் நாயனரைத் துதித்து, முன்னர்ப் பிரசித்தப்படுத்தியபடி ஓர் ஊரும், அளவற்ற திரவியமும் கொடுத்த துமன்றி, நாயனர் யோக்கியத்தையும் மகத்துவத்தையும் பார்த்து, வாசுகி யென்னும் தன் பெண்ணையும் கொடுக்கும்படி நிச்சயித்து, நாயனரிடத்து வந்து "சுவாமி! என் பெண்ணைத் தேவரீருக்கு விவாகஞ் செய்து கொடுக்க நினைத்திருக்கிறேன். அப்படியே அங்கீகரித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். நாயனர் உலகத்தாருக்கு இல்லறம் நடத்திக் காட்டவேண்டுங் காரணத்தை யோசித்து, "அந்தப் பெண் நான் கொடுக்கும் மணலை அன்னமாக்கி எனக்குப் படைக்குமானல் விவாகஞ் செய்தகொள்ளுவேன்" என்றார். அந்தப்பெண் அப்படியே சம்மதித்து நாயனர் கொடுத்த மணலைச் சமைத்துப் படைத்தனள். பின்பு நாயனரும் அங்கீகரித்து, விதிப்படி வாசுகியை விவாகஞ் செய்துகொண்டு, சிலநாள் அங்கிருந்து, பின்பு மனைவியுடன் திருமயிலைக்கு வந்து, ஓர் இல் ஆக்கிக்கொண்டு, இல்லறஞ் செய்து, செய்தொழில்களில் நெய்தற்றொழில் பாபமில்லாததென்று தீர்மானித்து, அவ்வூரிலிருக்கும் ஏலேலசிங்கன் என்னும் பெரிய வர்த்தகனிடத்தில் நூல் வாங்கி ஆடை நெய்து, அதனல் வருங் கூலியால் சீவனஞ் செய்து, காலங் கழித்திருந்தனர்.

அக்காலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகராக எழுந்தருளியிருக்கும் நாம், மகிடாசுர சங்காரஞ்செய்து கர்வித்திருந்த பத்திர காளியின் செருக்கை யடக்கும்பொருட்டுப் பலவகை நடனம் புரிகையில், காளியும் தோல்வி யடையாமல் உடனே நடனமிட, அப்போது நமது குண்டலங் கழன்றதைக் காதிலேதானே சேர்ந்திடுமாறு ஊர்த்துவபாதமாக நடனஞ் செய்தோம். அவளும் அப்படியாட நாணித் தோற்ருள். இங்ஙனம் நாம் இடையில் ஊர்த்துவ தாண்டவமாடிய இரகசியமான காரணத்தைக் குறிப்பாக அறியாத தேவர்கள் சந்தேகமுற்று, "சுவாமி! தேவரீர் தற்செயலாய் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தது என்ன காரணமோ? தெரியவில்லை" என்று கேட்க, நீங்கள் திருமயிலையில் இருக்குந் திருவள்ளுவரைக்கேட்டீர்களானல் அது சங்கதி தெரியுமென்று சொல்ல, தேவர்கள் நமது ஆஞ்ஞையின்படி அங்கே போய் அவர் முன்னிலையில் நிற்கையில், அக்குறிப்பறிந்து நாயனர்,

### வெண்பா.

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி
லிழைநக்கி நூனெருடு மேழையறி வேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

என்று உண்மையை அறிவிக்க, அவர்களனைவரும் அவ்வாக்கியத்தைக் கேட்டுத் தங்கள் சந்தேகந் தெளிந்து, இவரது ஞானக்கண்ணைக் கொண்டாடிப் போனார்கள்.

## ஏலேலசிங்கருக்கு ஞானோபதேசம் செய்தது.

ஒருநாள் நாயனார் நூல்வாங்கும் பொருட்டு ஏலேலசிங்கர் வீட்டுக்குப்போய்ச் "செட்டியார் எங்கே!" என்று கேட்க, அங்குள்ளார் "அவர் சிவபூசை செய்கிறார்" என்றார்கள். "அவர் சிவபூசை இங்குச் செய்கிறாரோ, அல்லது குப்பத்திற் செய்கிறாரோ!" என்று சொல்ல, அதற்கு அவர் பத்தினியார் உள்ளேபோய்க் கணவருக்குச் சொல்ல, செட்டியார் கேட்டுச் சிவபூசையை விட்டுத் திடுக்கிட்டோடி வந்து, நாயனாருடைய உபய பாதங்களை வணங்கி, "சுவாமி! அடியேனைப் பந்தசாகரத்தினின்று மெடுத்துக் கரையேற்றி யருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனர். நாயனார் அவரது பக்குவத்தையும் மற்றுஞ் சில மாணாக்கர் பக்குவத்தையும் சோதிக்கவெண்ணி, ஒருநாள் அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு வனத்திற் சென்று அங்கு வெள்ளம் பெருகிவரச் செய்தனர். அவர்கள் பயந்து மனோதிடமின்றி இக்கரையிலிருந்து உடன் போகமாட்டாமல் விழிக்க, ஏலேலசிங்கர் மாத்திரம் தம்மைத் தொடர்ந்து வர, அவ்வெள்ளம் வழிவிட்டது. பின்பு நாயனார் ஏலேலசிங்கரைப் பார்த்து, "ஓர் உயர்ந்த மரத்தினுனியில் ஏறு" என்று சொல்ல, அவர் ஏறிய பின்பு "பிடித்த கொம்பையும் நின்ற கொம்பையும் விட்டுவிடு" என்று சொல்ல, அவ்வாறே யோசியாமல் விட்டனர்; விட்டும் ஓர் அபாயமு மில்லாதிருக்கக் கண்டு, நாயனார் ஏலேலசிங்கரைத் தமது மடியின்மீது வைத்து ஞானோபதேசம் செய்து, எப்படிப்பட்ட சௌந்தரியமுள்ள மங்கையர்கள் மயக்கினு மயங்காத திடச்சித்தத்தையும் அனுக்கிரகித்தார். பின்பு தம்மிடத்துக்கு வந்துவிட்டார்கள். அப்படி யிருக்குநாளில், திருமயிலை நாட்டுக்கு அரசனாகிய அச்சுதராஜன் ஒருநாள் ஏலேலசிங்கரோடு பேசிக்கொண் டிருக்கும்போது, 'உமக்குப் புத்திரப்பேறில்லையே! உம்முடைய ஞானாசிரியரை அப்பேறுண்டாகக் கேட்கலாகாதா?" என்ன, அவர் "நல்லது" என்று போய், மற்றொரு நாள் நாயனாரைக் கண்டு விண்ணப்பஞ் செய்ய, நாயனார் "சுவாமி கடாக்ஷிப்பார்" என்று அனுக்கிரகம் பண்ணினார்.

## ஏலேலசிங்கருக்கும், அச்சுதராஜனுக்கும் தெய்வீகமாகக் குழந்தை கிடைத்தது.

பின்பு ஒருநாள் ஏலேலசிங்கரும் அவர் மனைவியும் வழக்கப்படிக் காலையில் தரிசிக்கும் பசுவின் வால்புறத்தில் நாம் சிறு குழவியாய் இருந்து அழுவதைக் கண்டு, அவர்கள் அக்குழந்தையை எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு ஆனந்தவாரிதியி லழுந்தினார்கள். உடனே அந்த அம்மாள் ஸ்தனங்களிலே பால்சுரந்து பெருக, இக்குழந்தைக்குப் பால்கொடுத்து ஞானகுருவாகிய நாயனார் சந்நிதானத்திற்குக் கொண்டுபோய் வைத்து வணங்கினார்கள். அவர் அக்குழந்தைக்கு உழுநாநந்தர் என நாமகரணம்செய்து அனுப்பினார். உடனே ஏலேலசிங்கர் அச்சுதராஜனென்னும் அரசனிடத்திற்சென்று, எனக்குத் தெய்வீகத்தினால் குழந்தை உண்டாயிற்று என்று சொல்ல, அவன் அப்படித் தெய்வீகமாகக்கிடைத்திருந்தால் அக்குழந்தை என்

னிடத்திலும் வரலாமே என்ருன். அவ்விருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது அக்குழந்தை அரசனது மடியிலும் வந்திருந்தது. அதை அவன் கண்டு ஆச்சரியமடைந்து இஃது அழகானந்தமோவென்று ஆனந்த மடைந்து அணைத்துக்கொண்டு தன் மனைவிகையிற் கொடுக்க, அவள் வாங்கினவுடனே ஸ்தனங்களினின்று பால்பெருக அதனைக் குழந்தைக்குப் புகட்டினுள். இப்படி அற்புதமாய் அக்குழந்தை வளர்ந்து வந்தது. பின்பு நாயனுர் அனேகருக்கு ஞானுேபதேசஞ் செய்துகொண்டு அதிக மகிமையோடு இருந்தனர்.

## கரை தட்டிய கப்பலைக் கரைக்குச் சேர்ப்பித்தது.

மற்ருெரு தினத்தில் ஏலேலசிங்கரது கப்பல் கரைதட்டிப் போக, அதைக் கேள்விப்பட்டு அவர் தம் அரசனுடனே சொல்ல, அவன் "நம்மாலாவதென்ன இருக்கிறது. உம்முடைய ஆசாரியருடனே சொல்லும்" என்ன, அவர் போய் விண்ணப்பம் பண்ணிக்கொள்வதற்கு முன்னமே நாயனுரறிந்து, ஏலேலசிங்கரை அழைப்பித்துக் கூட்டிக்கொண்டு போய், கப்பலிற் கயிறு பூட்டி அனேகம் படவுகாரர் இழுத்திழுத்தும் எவ்வளவும் அசையாமற் பதிந்திருப்பதனுல் அவர்களெல்லாஞ் சோர்ந்து கிடப்பதைக் கண்டு, நாயனுர் அதனருகிற் சென்று தமது திருக்கையாற்ருெட்டு * "ஏலையா என்று இழுங்கள்" என்று கட்டளையிட, அப்படியே இழுத்தார்கள். உடனே நிற்க வேண்டியபடி கப்பல் சரியாக நின்றது.

## பஞ்சத்தை நிவிர்த்தி செய்தது.

பின்பு ஒருகாலம் மழையில்லாமையால் உலகத்தில் தானியங் கொள்ளக் கிடையாமல் அனேகர் இறந்துபோவதைக் கண்டு, சீவகாருண்யராகிய நாயனுர், தமக்கு அன்புள்ள மாணுக்கராகிய ஏலேலசிங்கரைப்பார்த்து, "நீர் இந்தப் பஞ்சகாலம் மாறுகிறவரைக்கும் வாங்கிக் கட்டிவைத்திருக்கும் நெல்லையெல்லாம் வாங்கின விலைக்குக் குறுணி யேற்றமாக விற்கக்கடவை" என்றருள, அவ்வாறே குருமொழி தவருது விற்றனர். பொருள் அதிவிர்த்தியாய் மலைபோலுங் குவிந்தது. அவர் கட்டிவைத்திருந்த நெற்கூடோ ஏழுவருஷங் குறையாமலே யிருந்தது. பின்பு மழை பெய்து உலகம் செழிப்படைந்தது. மறுபடியும் நாயனுர் ஏலேலசிங்கரை நோக்கி, "குறுணி குறைய வில்" என்ருர். அப்படியே விற்ருர். அவரிடத்தில் இருந்த நெல்லெல்லாம் மறுநாள் அஸ்தமயனத்துக்குள்ளே செலவாய்ப் போய்விட்டன.

## கடலிற் போட்டுவிடப்பட்ட பொன் மீண்டுங் கிடைத்தது.

பின்பு நாயனுர் ஏலேலசிங்கரைப் பார்த்து "நீர் நெல்லு விற்று விர்த்தியான பொருள்களை யெல்லாம் உருக்கித் திரட்டிக் கடலிற் போட்டுவிடும்" என்ன, அவர் அப்படியே செய்தனர். அதனை ஒரு

* இது காரணமாகவே பளுவிழுப்போர் 'ஏலேலோ ஏலவலி' என்று சொல்லி இழுப்பதாகச் சொல்லப்படுகின்றது.

பெருமீன் விழுங்கிற்று. சிலநாள் சென்றபின் அம்மீன் வலைக்காரர்
கையில் அகப்பட்டது. அதனை அவர்கள் சேதிக்கும்போது, அதன்
வயிற்றில் மலினமும் பாசியும் படிந்ததொரு ஸ்தம்பமிருக்கக்கண்டு
அதனை ஏலேலசிங்கருக்குக் கொடுத்தார்கள். அவர் கருங்கல்லென்
றெண்ணி ஸ்நானம் பண்ணுமிடத்திற் போட்டுவைத்தார். அதன்
மேல் நடத்தன்முதலிய பயிற்சியால் மலினம் நீங்கிப் பிரகாசித்தது.
அதில் தமது பேர் வெட்டியிருத்தலால் தம்பொருளென் றறிந்து,
இது குருவருளென்று அற்புதமடைந்தார்.

## திருக்குறள் பாடியருளியது.

இப்படி நாயனார் அநேக அற்புதங்களைச் செய்துகொண்டிருக்கு
நாளிலே பாண்டிநாட்டிலே மதுரையிலே நற்கீரர் முதலிய சங்கப்
புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப் பெருக்கால் கர்வமடைந்து,
அங்குபோந்த வித்வசிரோன்மணிகளையெல்லாம் அவமதித்து நடப்
பதைக் கேள்வியுற்றிருந்த அழகானந்தர் முதலிய சில பெரி
யோர்கள் திருவள்ளுவரைப் பார்த்துக் கற்றற்கெளிதாய் இம்மை
யாதி மும்மைக்கு முதவியாய் லோகோபகாரமாய் உமது பெயரால்
ஒரு நூல் செய்யவேண்டுமென்று வேண்ட, நாயனார் வேதாகம சாரங்
களைத் திரட்டி அறம் பொருள் இன்பமென முப்பாலாக்கி, 1330-
குறள் வெண்பாவாற் பாடியருளினார். பின்பு அழகானந்தர் முதலா
யினோர் அந்நூலைக்கண்டு சந்தோஷித்து இதைக்கொண்டு சங்கத்
தாரைச் செயிக்கலாம் என்று துணிந்து, நாயனாருக்குத் தங்கள் எண்
ணத்தைத் தெரிவித்தனர். நாயனார் தமது மனைவியை இல்லின்க
ணிறுத்தித் தாம் வழிக்கொடு நடந்து, இடைக்காடர்வசிக்கிற இடை
க்கழிநாட்டை அணுகிச் சேர்கையில், ஔவை நேர்பட அவளோடும்
இடைக்காடரைக் கண்டு தாஞ்செல்லும் காரணத்தைத் தெரிவிக்க
இடைக்காடரும் நாயனாரைநோக்கி "இடையாலுங் கடையாலு மழி
யக்கடவதென்று ஸ்வாமி தம்மை நிராகரித்த நக்கீராதி சங்கத்தா
ரைச் சபித்திருக்கிறார்; ஆதலால் என்னாலு மும்மாலு மச்சங்கம்
அழிவுபடப்போகிறதாகையால் நாமும் உம்முடன்வருகிறோம்" வாரு
மென்று இடைக்காடரும் ஔவையுங் கூடவரப்பெற்று, மதுரையை
யடைந்து வைகையாற்றில் ஸ்நானஞ்செய்து நித்தியநைமித்திப கரு
மங்களை முடித்துக்கொண்டு ஆலயத்தைப் பிரதட்சணம் பண்ணி
அங்கு மீனாக்ஷி சொக்கலிங்க மூர்த்தமாய் வீற்றிருக்கும் நம்மைத்
தரிசனஞ்செய்தனர். பின்பு ஷை சந்நிதானத்தில் பாண்டிய ராஜா
மந்திரி பிரதானிகள் மற்றச்சனங்கள் ஔவை இடைக்காடர் முத
லான பெரியோர்களிருந்து கேட்கும்படித் தாமருளிச்செய்த திருக்
குறள் முப்பாலையும் சங்கத்தார் நெஞ்சிற் றிகிலேறவும், ஏனையர்
நெஞ்சிற் களிப்பேறவும் திருவள்ளுவர் அரங்கேற்றி முடித்தனர்.
அதனைச்செவியாறக் கேட்ட இராஜன் முதலியோர் யாவரும் மிகு
ந்த பரவசராய் நாயனாரைப் புகழ்ந்து துதித்தனர்.

## சங்கத்தாரின்மீது வெற்றிபெற்றது.

பின்பு நாயனார், இடைக்காடரும் ஔவையும் மற்றவர்களுஞ்
சூழ்ந்துவரப் பொற்றாமரைத் தீர்த்தத்தின்கண்ணுள்ள சங்கப்பலகை

யின்கண் தமிழ்க்கரசராக வீற்றிருக்கின்றவர்களும் தவத்திலும் ஞானத்திலுஞ் செந்தமிழ்வாக்கிலும் அமைந்த பெரியோராகிய திருவாதவூரரென்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் நானூற்றுக்கும் நூறுகுற்றங் கூறினவர்களும், நமதன்பனாகிய தருமியென்னும் ஏழைப்பிராமணனுக்குப் பொற்கிழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த,

அகவல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றருவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே.

என்னும் திருமுகப் பாசுரத்திற்குக் குற்றங்கூறினதினல், நாம் ஓர் வித்வானாய் அச்சங்கத்திற் கேகி நக்கீரரைப் பார்த்து,

வெண்பா.

அங்கங் குலைய வரிவாளி னெய்பூசிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனே வெண்கவியை
யாராயு முள்ளத் தவன்.

என்று கேட்டபோது நக்கீரன் நம்மை அறிந்துகொண்டு,

வெண்பா.

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனார்க் கேதுகுலம்
பங்கமறச் சொன்னல் பழுதாமே - கங்கை
யறிந்துண்டு வாழ்வோ மரனே நின்போல
விரந்துண்டு வாழ்வ திலை.

என்று சொல்ல, நாம் நமது நெற்றிக்கண்ணைக்காட்ட அப்போதும் அஞ்சாமலும் உம்மைப்போல எத்தனை மந்திரவித்தைக்காரர்களை நாங்களறிவோம்; நீர் இப்போது காட்டிய நெற்றிக்கண்ணேயன்றி உடம்பெல்லம் கண்ணகக் காட்டினும் நீர் பாடிய பாட்டில் குற்றமே என்று கூறினவர்களும், மற்றப் புலவர்கள் பாடிய பாடலையெல்லாங் கொள்ளையிட்டு அகஸ்தியரையும் வெற்றிகொள்ளத்தக்க விலக்கண விலக்கிய வாராய்ச்சி யுள்ளவர்களுமாகிய நக்கீராதிப் புலவர்களுடைய தைரியமும் தருக்கும் புத்தியுங் கலங்கிச் சோர்வடையும்படி ஆட்டுக்கூட்டத்தில் புலி புகுந்தாற்போலவும், அராக்கூட்டத்தில் கருடனடைந்தாற்போலவும், யானைக்கூட்டத்தில் சிங்கவேறு சென்றுற்போலவும், மூங்கில் வனத்திற் றீப்பற்றியது போலவும் அவர்களிடத்திற் சென்று அவர்கள் தம்மை வினவின அசதி வினுக்களுக்கெல்லாஞ் செந்தமிழ்ப் பாவா லுத்தரங் கொடுத்தார்.

பின்பு சங்கத்தார் நாயனரை நோக்கி, வள்ளுவரே! நீர் எந்த வூர்? என்று கேட்க, அதற்கவர் :

வெண்பா.

எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீ
ரந்தவூர் செய்தி யறியீரோ - வந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பாழா யறும்.

என்பது முதலிய ஞானர்த்தமாகிய செய்யுட்களால் விடைகூறினர். பின்பு சங்கத்தாரை நோக்கி நமது மூதாட்டியாகிய ஔவை கைச் சைகையா இவை யென்னவென்று கேட்க, அவர்கள் :

வெண்பா.

இவ்வளவு கண்ணிண ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவு போன்ற விளமுலையா - ளிவ்வளவாய்க்
காமத் தலைவனையுங் காணது கன்றினு
ணமத்தை நாட்டுகுறி நன்கு.

என்று விடைகூற, அஃது தகுதியான உத்திர வன்றென்று அக் குறிகளுக்கு ஔவை சொல்லியது :

வெண்பா.

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னும்மனத்தை யிட்டுண்மின் - றெய்வ
மொருவனே யென்ன வுணரவல் லீரே
லறுவினைக ளேந்து மறும்.

என்று மொழிந்ததைக் கேட்டு சங்கத்தார் திகிலடைந்து இவளை வெல்லப்படாதென்று துணிந்து, இடைக்காடருடனே பேச அவர் :

வெண்பா.

ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கை யிருந்து கஃகஃகெனக் - காக்கைதனை
யெய்யக்கோ வில்லாம லிச்சிச்சென வெய்தான்
வையக்கோ னர்தன் மகன்.

என்று கூறிய இதுபோன்ற செய்யுட்களுக்கு உத்திரம் கொடுக்கச் சக்தியின்றி இவர்களை வெல்வ தரிதென்றறிந்து நாணமுற்றனர்.

சங்கப்பலகை இடந்தந்தது.

பின்பு, சங்கப்புலவர்கள் நாயனரை நோக்கி, "நீர் பாடிய குறளை நாங்க ளொப்புக்கொள்ளுவதற்கு ஐயமொன்றுளது; அஃதியாதெ

னின் நாங்களிருக்கு மிந்தப் பலகை தெள்ளிய செந்தமிழ் நூலைக் கண்டா லிடங்கொடுக்குமாதலால் அது ஒப்புக்கொள்ளுமாகில் எங்களுக்கெல்லாஞ் சம்மதி" என்று சொல்ல, அவ்வாறே நாயனுர் தம்மால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறள் முறையை அச் சங்கப்பலகைமீது வைத்தார். உடனே அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார் யாவரும் பொற்ருமரையில் விழும்படிதெய்வத்தன்மை பொருந்திய திருக்குறட் புத்தகத்தி னளவாய்ச் சுருங்கி அதற்குமாத்திரமிடங்கொடுக்கக் கண்டவர்கள் யாவருங் களிகூர்ந்தனர். அவருட் சிலர் இது தெய்வீகமாகிய வேதமென்றும், சிலர் வேதாங்கங்களென்றும், சிலர் ஞான நூலென்றும், சிலர் ஆகமமென்றும், சிலர் புராணங்களென்றும், சிலர் வாலிபர் மதஞகமமென்றுந் தத்தமக்குத் தோன்றியவாறு பலவாருகச் சொல்லித் துதித்தனர். அன்றியும் அநேக விசேஷமான பல நூல்களும், சாஸ்திரங்களும் இத்திருக்குறளினது பாயிரத்திஞேர் பாடலின் பொருளுக்கு மொவ்வாதென்றும், இதுவே வித்வான்களுடைய பாக்கியமென்றும், இந்தப் பயன் அநேகமாயிரம் அகஸ்தியர்கள் ஒருருவாகி வந்து பாடப்பட்டதோவென்றும், பல விலக்கண விலக்கியங்கட்கும் இஃது அங்கத்தை யொக்குமென்றும், விஷ்ணுவானவர் இவ்வுலகை இரண்டடியாலளந்தார் இது எல்லாருள்ளத்தையு மீரடியாலளந்ததென்றும், இது சட்சமயத்துக்கும் பொதுநூலென்றும், உட்சமயத்துக்கே யுரியநூலென்றும் கல்விமான்களும் அரசர்களும் மற்றவரும் கொண்டாடித் துதிக்கும்போது, பொற்ருமரையில் விழுந்து தடுமாறித் தத்தளித்து வருந்தி நிற்கும் சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் மிகக் கலங்கிக் கரையேறி நாயனுரையும் திருக்குறளையும் புகழ்ந்து துதித்து நாற்பத்தொன்பதின்மரும் நாற்பத்தொன்பது வெண்பா அருளிச்செய்தனர். அஃது திருவள்ளுவமாலை யெனப் பெயர்பெறும்.

## அகஸ்தியமுனிவரைத் தரிசித்துத் திருமயிலைக்குத் திரும்பியது.

ஷை சங்கத்தாரும் உக்கிரப் பெருவழுதி யென்னும் பாண்டியன் முதலானவர்களும் நாயனுரைத்துதித்து அத்தியந்தம் ஆனந்தமடைந்து வெகு பூசிதம்பண்ணி இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளின் மிக நல்லதென்ன, அதற்கு நாயனுர் சம்மதித்து விடைபெற்றுப் பொதியமலைக்குப் போய் அகஸ்தியர் முதலிய முனிவர்களைக் கண்டு தாஞ்செய்த நூலைக் காண்பிக்க, அவர்கள் அதை நன்குணர்ந்து அடைந்த சந்தோஷத்தையும் புகழ்ந்த பாடலையும் அனந்தனுலுஞ் சொல்லமுடியாது. அவ்விடத்தில் கொங்கண சித்தர் தம்மை வழிபட அவருக் கனுக்கிரகித்து நாயனுர் அவர்களிடத்தில் உத்திரவு பெற்றுத் தாம் முன்புபோம்போது வழியில் நேர்படாத ஸ்தலங்களையெல்லாந் தரிசனம் பண்ணிக்கொண்டு திருமயிலைக்குச் சமீபமாக வருவதை அப்பதியாரும் ஏலேலசிங்கருங் கேள்விப்பட்டு எதிர்கொண்டுபோய் அழைத்துவந்தார்கள். அவரும் வந்து தமதில்லத்தில் வாசுகி மாதிஞேடிருந்து இல்லறம் நடாத்தி வந்தார்.

## இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ?

இப்படி இருக்கையில் ஒரு பெரியவர் அவரில்லின்கட்சென்று சுவாமீ! இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? அடியேனுக்கு அனுக்கிரகிக்க வேண்டுமென்று பலநாள் பணிசெய்து காத்திருக்க நாயனார் அவருக்கு உத்தரமொன்றுஞ் சொல்லாமல் அவரே அறிந்துபோகும்படி ஒருநாள் தமது வாசுகி யென்னும் மனையாள்கிணற்றில் ஜலந்தூக்கிக்கொண்டிருக்கையில் அழைக்க, அந்தம்மாள்பாதிகிணற்றளவில் தூக்கின குடத்தை அப்படியே நிற்கவிட்டு வந்ததையும், மற்றொருநாள் அந்தம்மாள் நாயனாருக்குப் பழையது பரிமாறி நிற்கையில் நாயனார் எனக்கு இச்சாதஞ் சுடுகின்றதென அந்தம்மாள் சீக்கிரம் விசிறிகொண்டு விசிறியதையும், மற்றொருநாள் நல்ல மத்தியானத்தில் சிறிது மிருளணுகாவிடத்தில் தாம் நெய்யும்போது கையிலிருந்த குழல் தவறி வீழ்ந்ததை யெடுக்க மனையாளை நோக்கித் தீபம் கொண்டுவாவெனக் கொண்டுவந்ததையும் வந்திருந்தவர் கண்டு இப்படிப்பட்ட மனையாள் வாய்க்கில் இல்லறமே பெரிதென்றும் இல்லையேல் துறவறமே பெரிதென்று மெண்ணிக்கொண்டு ஒன்றுங் கேளாமற் போய்விட்டார்.

## வாசுகி முத்தி யடைந்தது.

இப்படி நாயனாருந் தம்மனைவியும் அருமையாக இல்லறநடாத்தி வருங் காலத்தில், வாசுகியம்மாள் மோக்ஷமடையும்போது நாயனார் திருமுகத்தைப்பார்க்க, நாயனாரும் என்னென்றார். என்னை மணஞ்செய்தவன்று தொடங்கித் தேவரீருக்கு அன்னம் பரிமாறும்போது ஒரு சிறு பாத்திரத்திற் சலமும் ஊசியும் வையெனக் கட்டளையிட்டது இன்னகாரணமென இன்றுவரையில் அடியேற்குத் தெரியவில்லை யென்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் அன்னம் புறத்திற் சிதறில் எடுத்துப் பரிசுத்தஞ் செய்வதற்கென்று சொல்ல அதைக் கேட்டு உடனே மோட்சமடைந்தனள். அப்போது நாயனார் பாடிய

வெண்பா.

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறாத பாவா - யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
வென்றூங்கு மென்க ணிரா.

என்றுரைத்து அந்தம்மாள் திருமேனியைச் சமாதிபண்ணினார்.

## திருவள்ளுவர் பரிபூரண முற்றது.

பின்பு அவர் மகா அற்புதங்களைச் செய்துகொண்டிருந்து, ஏலேலசிங்கரைப் பார்த்து நமக்குப் பரிபூரணதசை நேரிட்டிருப்பதால் நம்மது சரீரத்தை வீண் டம்பமின்றிப் புரிகட்டித் தெருத்தெருவாய் இழுத்துக் கடைசியில் ஊர்ப்புறத்தில் ஈசானியதிசையில் போட்டுவிடென்று கட்டளையிட்டு நிஷ்டை கூடிப் பரிபூரணமானவர்போல்

இருக்கக்கண்டு, ஏலேலசிங்கர் பொற்பெட்டியில் வைத்து அடக்கஞ் செய்ய எத்தனித்ததை அறிந்து நாயனர் கண்விழித்துப் பார்த்து "அப்பா நான்சொன்ன சொல்லைக் கடவாதே" யென்று சொல்லி உடனே விதேகமுத்தி யடைந்தனர்.

ஏலேலசிங்கர் நாயனர் கட்டளையைச் சிரமேற்றாங்கி அவர் சொல்லிய வண்ணம் நாயனரைப் புரிகட்டி யிழுத்துத் தெருத்தெருவாய்ச் சுற்றிப் பின்னர் ஈசானியமூலையில் எறிந்துவிட்டனர்.

அவரது சரீரப் பரிசமடைந்த ஜெந்துக்களெல்லாம் பொன்னிறமடைந்து சுவர்க்கம் பெற்றன வென்று உமாதேவியாருக்குப் பரம கிருபா நிதியாகிய பரமேசுவரர் திருவாய் மலர்ந்தருளினர்.

திருவள்ளுவநாயனர் திவ்ய சரித்திரம்

முற்றிற்று.

## நாயனர் குருபூஜைத் திருநக்ஷத்திரம்.

வெண்பா.

மாசியுத்தி ரத்தினத்தில் வள்ளுவனர் மாநிலம்விட்
டாசில்பல முத்தியடைந் தாரால்—காசினியில்
கொல்லா விரதங் குறிக்கொண்டா ரெல்லாரும்
நல்லார்வஞ் செய்மினந்த நாள்.

உ

ஸ்ரீசற்குருவே துணை.

வித்துவான் - திருமயிலை,

**வி - சுந்தர முதலியாரவர்கள்**

இயற்றிய

# திருவள்ளுவநாயனார் தோத்திரம்.

# சற்குருவிசுவாசம்.

இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

சற்குரு விசுவாசம் - தனைமறவாதிரு
சாருஞ் ஞானப்ரகாசம்.

அநுபல்லவி.

கற்பிதப்பிரபஞ்சத்தில் காணுவதரிதிந்த
அற்புதநரஜென்மம் அகலுமுன்னெஞ்சே — சற்குரு

சரணங்கள்.

அகரமுதலாயோங்கும் ஐம்பத்தோரக்ஷரத்தைப்
பகருஞ்சாத்திரங்களின் பான்மையறிவதற்குச் — சற்குரு

முச்சுடராலவிளைந்த மூலாக்கினியாம்பீடத்
துச்சியிலமர்ந்தருள் தும்பிமுகனைக்காணச் — சற்குரு

சீர்த்திபெறும்வேத சிவாகமங்கள்கூறும்
மூர்த்திதலந்தீர்த்த முறைமைதெரிந்துய்யச் — சற்குரு

காட்சிபடும்பொருளைக் கருதாமற்பேரின்ப
சூட்சியறியும்வகைத் தோன்றுவதற்குநிதம் — சற்குரு

ஆங்காரத்தாலலையும் ஐம்பொறிகளைவென்றுள்
ஓங்காரவட்டத்தொளிருண்மையிதென்றறியச் — சற்குரு

உற்றாருறவெனுமிவ் வுலகபந்தமறக்
கற்றார்சமூகமதைக் கலந்தினிவாழ்ந்திட — சற்குரு

அகமும்புறமுமொத்து ஆனந்தமயமாகச்
சுகவாரிதனிலென்றுந் தோய்ந்திருப்பதற்குச் சற்குரு

ஆதாரமாறினுக்கும் அப்பால்விளங்குசிவன்
பாதாரவிந்தமதைப் பரவிப்பணிவதற்குச் சற்குரு

சுந்தரன்துதிசிவத் தொண்டர்சூழ்மயிலையில்
செந்தமிழ்வேதமாந் திருக்குறளருளிய சற்குரு

**நாமாவளி.**

சற்குருநாதன் மலரடியே-நிதஞ்
சார்ந்தோர்க்கில்லை துயர்மிடியே.

---

## திருவள்ளுவநாயனார்
## வருகைப்பஞ்சகம்.

**விருத்தம்.**

சோதிவருக தூயபரஞ் சுடரேவருக சுகாநுபவ
நீதிவருக நின்மலத்தோர் நினைவேவருக நீண்டமறை
யோதிவருக வியன்குறட்பா உருவேவருக வோங்குதமிழ்க்
காதிவருக திருமயிலைக் கரசேவருக வருகவே. (க)

நித்தாவருக நிறைந்தசிவ நிலையேவருக நீறுபுனை
சித்தாவருக ஏலேல சிங்கற்குபதே சிகவருக
சுத்தாவருக இல்லறத்திற் றுறந்தாய்வருக துன்பொழிக்கும்
முத்தாவருக திருமயிலை முதல்வாவருக வருகவே. (உ)

வேதாவருக அறமுரைத்த வேந்தாவருக மெய்ஞ்ஞான
போதாவருக நன்குணர்த்தும் புலவாவருக பெருந்தவத்தோர்
நாதாவருக சிரமுடியார் நண்பாவருக நளினமலர்ப்
பாதாவருக திருமயிலைப் பதியேவருக வருகவே. (ந)

பொருளேவருக தவக்கோலப் புனிதாவருக முத்திரைக்கைத்
தெருளேவருக செபமாலைச் செல்வாவருக சிந்தித்தோர்க்
கருளேவருக கடைச்சங்க மழித்தாய்வருக மெய்யன்பர்
மருளேதவிர்க்குந் திருமயிலை வாழ்வேவருக வருகவே. (ச)

மதியேவருக மாசகற்று மணியேவருக மண்ணிலுயர்
சதியேவருக என்னிரண்டு கண்ணேவருக கருணைசெறி
நிதியேவருக நெஞ்சகத்தி னினைக்கவருக நீயுவந்தித்
ததியேவருக மயிலையிற்சற் குருவேவருக வருகவே. (ரு)

# தேவர்தியானுஷ்டகம்.

## விருத்தம்.

கதிதருந் தேவே கற்பகக் காவே கருணைசே ரருந்தமிழ் கோவே
மதிபெரு வாழ்வே மாகுணக் குன்றே மலரவ னுருவுகொள் ளன்பே
நிதிவரு முப்பா னூன்மறை வடிவே நின்பத மலர்த்தொழ வருள்வாய்
துதிசெயு மன்பர் சூழ்திரு மயிலைச் சுந்தர சற்குரு மணியே. (க)

பண்டுழூழ் வினையாற் பரவிய துன்பம் பரிந்துவந் துட்புகுந்
தென்னைக், கண்டடற் சகியா வண்ண மிப் புவியிற் கவலையைத் தரும்
பல நோய்கள், விண்டுநின் கோயி னற்பணி யாவும் விழைந்தியற் றிட
வருள் புரிவாய், தொண்டுசெய் முனிவர் சூழ்திரு மயிலைச் சுந்தர சற்
குரு மணியே. (உ)

ஆதிநூ லாகு மாரிய வேதம் அந்தணர்க் குரியதென் றோர்ந்து
நீதிநூற் பயனை நிலத்தமிழ் மறையாய் நீணிலத்தவரெலாம் புகழ
வோதிய குறட்பா வுயர்கடைச் சங்க முற்றமெய்ப் புலவர்க ளேத்தச்
சோதிநூ லெனவே தொழுந்திரு மயிலைச் சுந்தர சற்குரு மணியே.

பொன்னையும் பந்தத் துறவினை வெறுத்துப் புண்ணியத் தல
மெலாஞ் சுற்றி, யுன்னைவந் தடைந்தே னேதுதற் கரிய வுத்தம நின்
பத மறவா, நன்னெறி நிற்கு ஞானம தருள்வாய் நாதனே மாதவர்க்
கரசே, துன்னுமா புன்னைச் சோலைசூழ் மயிலைச் சுந்தர சற்குரு
மணியே. (ச)

இகபர வாழ்வைத் தருங்குல விளக்கே யெளியனேன் பவத்
தொட ரகல, தகவுற வந்து நிஜவடி வாகத் தற்பத நிலைதெரித் தருள்
வாய், புகழறம் பொருளு மின்பம்வீ டுதவும் புண்ணிய பொற்பத
சேவை, சுகமுறு நல்லோர் சூழ்திரு மயிலைச் சுந்தர சற்குருமணியே.

விதிக்குமா ஜெனன மெடுத்தெடுத் திளைத்தேன் மேதினி யிற்
பிறந் திறவா, கதிக்குசன் மார்க்க நிலையரு ளன்பே கடையனேன்
சிந்தனை மறவா, மதிக்குநற் றுரியா தீதமே னிலையில் வளர்சச்
சிதானந்த முடிவே, துதிக்குமெய்ச் சித்தர் சூழ்திரு மயிலைச் சுந்தர
சற்குரு மணியே. (சு)

நற்றமி ழாய்ந்த விற்பன ரேத்தும் நாயனா ரெனுந்திருப் பெய
ரைக், கற்றவ ரல்லான் மற்றவ ரறியார் கசடனுச் சரிக்கவுந் தரமோ,
சுற்றமுஞ் சார்ந்த மித்திர வாஞ்சைத் தொடர்பைசொர்ப் பனத்
தினு நினையா, சொற்றவ முடையோர் சூழ்திரு மயிலைச் சுந்தர சற்
குரு மணியே. (எ)

அண்டுவெம் பாச நெறியினைச் சேரா தகற்றமுன் வந்தெனை
யாள்வாய், பண்டுநா ளியற்றும் பவப்பிணி நீங்கப் பன்னரும் பாத
பங் கயத்தை.தக், கண்டுமா மலரைக் கொண்டருச் சித்துக் கதிபெ
றும் வழியினை நாடித், தொண்டுசெய் மறையோர் சூழ்திரு மயிலைச்
சுந்தர சற்குரு மணியே. (அ)

## திருவள்ளுவர் நாமாவளி.

மயிலையில் வளர்சற் குருமணியே - திரு
மலரடிதொழும் அன்பர் குலமணியே.

அறம்பொருள் இன்பம்வீ டளித்தோனே
அகரமென் றெடுத்துள்ளங் களித்தோனே. மயிலையில்

திருக்குறட் பாமாலை தந்தோனே
ஜெகத்குரு வடிவமாய் வந்தோனே. மயிலையில்

முப்பா னூலெங்கும் பொழிந்தோனே
மூதறி வோர்க்கற மொழிந்தோனே. மயிலையில்

உத்தர வேதப்பொரு ளுரைத்தோனே
உலகோர்க் ககவிருள் மறைத்தோனே. மயிலையில்

தெய்வநூ லிதுவெனத் தெரித்தோனே
தெளியமெய்ஞ் ஞானத்தை விரித்தோனே. மயிலையில்

திருவள் ளுவரென விதித்தோனே
திசைமுக னுருவமா யுதித்தோனே. மயிலையில்

பொய்யா மொழியைப் புகன்றோனே
புகழுமில் லறமோங்க னின்றோனே. மயிலையில்

வாயுரை வாழ்த்தையிங் கறைந்தோனே
வாழ்க்கைத் துணையோ டுறைந்தோனே. மயிலையில்

தமிழ்மறை விளங்கிடச் செய்தோனே
சரண்பணிந் தோர்க்கருள் பெய்தோனே. மயிலையில்

பொதுமறை திருவாய் மலர்ந்தோனே
புண்ணிய ருள்ளத்திற் கலந்தோனே. மயிலையில்

கடைச்சங்கப் புலவரை வென்றோனே
கபாலீச் சரத்தில்வாழ் கின்றோனே. மயிலையில்

ஏலேல சிங்கர்க்கருள் தருவோனே
எத்திஞ் சுந்தரன் துதி பெறுவோனே. மயிலையில்

## திருவள்ளுவநாயனர்

# சந்நிதிவிளக்கம்.

### வெண்பா.

திருவள் ளுவனர் திகழுற் சவங்கொள்
பொருவிலருண் மூர்த்தமது பொற்பா-யுருவமைந்த
அத்தினந்தா ணர்கலியி லானவிடு வருடஞ்
சித்திரையிற் பூசத் தினம்.

இவ்வுலகில், எம்மதத்தவரும் சம்மதித்திருக்கும் சமரசஞான நீதிநூலாகவும், வித்வஜன சபைகளி லெங்கும் பிரகாசிக்குந் தமிழ் வேதமாகவும் சிறப்புற்றிருப்பது திருக்குறள். இந்நூலாசிரியராகிய தேவர் திருவவதாரஞ்செய்தருளிய க்ஷேத்திரமாகியசென்னைக்கடுத்த திருமயிலாப்பூரிலே ஷை நாயனர் ஆலயத்தில் நெடுங்காலமாக உத்ஸவமூர்த்தம் இன்மையால் அதை முடிப்பிப்பக் கருதி, சென்ற (கஅஅகஹு) விஷுஹு சித்திரைமீ உசவ குருவாரம் பூசநக்ஷத்திரங்கூடிய சுபதினம் மாலை ச-மணிக்கு, ஷையூர் பொன்னம்பலஸ்தபதியாரால் சிற்பசாஸ்திரோக்தமாக தரிசித்தபேர்களுக்குப் பரிசுத்தமாகிய ஞானவைராக்கிய பக்தி யெய்தும் வண்ணம்,

### ☞ திருவள்ளுவநாயனர்

உத்ஸவமூர்த்தம் மகாகெம்பீர திவ்ய மங்கள சொரூபமாக புண்ணிய சீலருதவியால் பூர்த்திசெய்வித்தும், ஷை நாயனர் வீதியுத்ஸவத்திற்கும் சதா எழுந்தருளியிழுப்பதற்கும் தக்கபிரபைதொட்டி கேடயங்களும், பெரிதான ஆராய்ச்சி வெண்கலமணியும், கொத்துமணியும், சரவிளக்கு முதலியனவு முடிப்பித்தும், ஷை ஆலயத்தில் நாயனர் ஆன்மார்த்த மூர்த்தமாயெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கைலாசநாதர் சந்நிதிக்குரிய ஸ்ரீ பாலசுப்பிரமணியக்கடவுளும் ஸ்ரீ சண்டேசுரமூர்த்தியும் சிலாமூர்த்தமாக முடிப்பித்தும், ஸ்ரீ சுந்தராம்பிகை சந்நிதியும் நூதனமா யமைக்கப்பட்டதோடு, இன்னுஞ் சில திருப்பணிகளும் பூர்த்தியாகவேண்டும்.

ஆதலால், மேற்படி திராவிடாசாரிய சுவாமிகளருளிய திருக்குறட்பயனால் கல்வி, அறிவு, ஒழுக்கமெய்திவரும் குருபக்திமான்கள் யாவரும் சதா ஷை ஆலயத்தில் வந்து தரிசித்துப் பேரானந்தமடைவதோடு, அந்நாயனரது குருபூசை திருநக்ஷத்திரமாகிய பிரதிமாசி மாத உத்திரத்தில் ஷை பரமாசாரிய மூர்த்திக்குக் கூடிய வரையில் குருபூசையும் மகேசுரபூசையும் நடத்தி, ஒரேசோடசோபசாரத்துடன் வீதி மகோத்ஸவமும் நடப்பித்து, அதன்பயனைப் பெறுதற்கரிய இஷ்டகாமியார்த்தசித்திகளைப் பெற்றுய்வார்களெனத் திருவருளைச்சிந்திக்கின்றனன். சுபம்.

திருமயிலை. வி. சுந்தரமுதலியார்.

## திருவள்ளுவரின் பெயர்கள்.

1. திருவள்ளுவர்
2. தேவர்
3. முதற்பாவலர்
4. மாதாநுபங்கி
5. தெய்வப்புலவர்
6. செந்நாப்போதார்
7. பெருநாவலர்
8. நான்முகனர்
9. புலவர்
10. பொய்யில்புலவர்
11. நாயனர்

## திருக்குறளின் பெயர்கள்.

1. திருக்குறள்
2. முப்பால்
3. பொய்யாமொழி
4. வாயுறைவாழ்த்து
5. உத்தரவேதம்
6. தெய்வநூல்
7. திருவள்ளுவர்
8. தமிழ்மறை
9. பொதுமறை
10. திருவள்ளுவப் பயன்
11. பொருளுரை.

## திருக்குறளுரையாசிரியர்கள்.

1. தருமர்
2. மணக்குடையர்
3. தாமத்தர்
4. பரிதி
5. திருமலையர்
6. மல்லர்
7. கவிப்பெருமாள்
8. காளிங்கர்
9. நச்சர்
10. பரிமேலழகர்